என்று விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பூராத் தொகையும் செலவிடப்படாததற்குக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கும் சமாதானம் சரியாக இல்லை. அதிகாரிகளிடத்திலே போதிய உற்சாகம் இல்லாத காரணத்தினால்தான், இந்த வேலை தடைப் பட்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவாரா?

கனம் திரு. வெ. ராமையா : அங்கே வேலை நடக்காததற்கான காரணங்களை என்னுடைய பதிலில் 'ஸி' பிரிவில் சொல்லியிருக் கிறேன். ஆனால், கனம் அங்கத்தினருடைய அபிப்பிராயத்தில், 'இந்தக் காரணங்கள் போதாது, இந்த வேலையில் இன்னும் சற்று அதிகக் கவனம் செலுத்த வேண்டும்' என்று கேட்டுக்கொள் கிறார்கள். அப்படிக் கவனம் செலுத்துவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

திரு. ஜே. மாதா கவுடர் : 1961-62-ம் ஆண்டுக்காக சாங்ஷன் செய்யப்பட்ட அந்தத் தொகை, அந்த ஆண்டிலேயே செலவிடப் படாமல் மீதம் இருக்குமானால், அந்தத் தொகையை 1962-63-ம் ஆண்டிலும் செலவு செய்து, தொடர்ந்து அந்த வேலையை எடுத்து முடிக்கலாம் என்ற நிலை அங்கு இருக்கிறதா? அல்லது, அந்தத் தொகை 'லாப்ஸ்' ஆகிவிடுகிறதா?

கனம் திரு. வெ. ராமையா : பொதுவாக, தொடங்கிய வேலையை முடித்துத்தான் ஆக வேண்டும். நிதி எப்படி வருகிறது என்பது பிரச்னை அல்ல. அந்த வேலைகளை முடிக்க இலாகா எல்லா முயற்சி களும் எடுக்கும்.

Nuclear Power Station

* 544 *Q.*—Sri C. CHIRANJEEVULU NAIDU (on behalf of Sri V. SANKARAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to locate a nuclear power station in the Madras State?

The Hon. Sri R. VENKATARAMAN : The Government of India have constituted a Site Selection Committee for the selection of sites for the establishment of Nuclear Power Station in India. This committee has inspected recently sites in this State also. The Government of India will take a decision in this matter, after the receipt of the report of the committee.

Pay of Extension Officers for panchayats (revision)

* 545 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to enhance the scale of pay of the Execution Officers for panchayats to the scale of pay of the Extension Officer for Co-operation?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No. Sir.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரிகள் ஏற்றிருக்கும் பொறுப்பை அனுசரித்து அவர் களுடைய ஊதிய விகிதத்தைத் திருத்தியமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?